மொத்தத் தொகை ரூ. 115,000 ஆக விளங்கியது. கட்டற்ற நிறைபோட்டிச் சந்தைகளின் நன்மைபற்றிய நுகர்வோரின் அறிவை அதிகரிக்கும் நோக்குடன் உள்நாட்டு வர்த்தகத்திணைக்களம் 1980 ஆம் ஆண்டில் நடத்தப்பெற்ற ஒவ்வொரு மகாபொல வர்த்தக சந்தைகளிலும் பொருட்காட்சிகளிலும் கல்வி நிலையங்களை அமைத்துப்பேணியது. நுகர்வோர் சங்கங்களின் நிறுவனம் பொறுப்பேற்கப்பட்ட துடன் அத்தகைய 905 சங்கங்கள் இவ்வாண்டின் இறுதியில் நிறுவவும்பட்டன.

## சுற்றுலாத்துறை

கடந்த பத்தாண்டு காலப்பகுதியில் சுற்றுலாத்துறையானது வெளிநாட்டுச் செலாவணியைப் பெறுவதிலும் தொழில்வாய்ப்பினை உருவாக்குவதிலும், வரு வாயை ஏற்படுத்துவதிலும் பிரதேச அபிவிருத்தியை ஏற்படுத்துவதிலும் முக்கிய மானதொரு மூலமாக விளங்கிவருகின்றது.

1980 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் சுற்றுலாப்பயணத்தர்களின் வருகை அதன் இலக்காகிய 298,000 த்தினை 8 சதவீதத்தால் விஞ்சி 1980 ஆம் ஆண்டில் நாட் டுக்கு வருகைதந்தோரின் மொத்தத்தொகை 321,780 ஆகக் காணப்பட்டது. இது முன்னைய ஆண்டின் எண்ணிக்கையைவிட 29 சதவீதம் கொண்ட அதிகரிப் பைக்கொண்டுள்ளது. இந்த ஆண்டில் அடையப்பட்ட வளர்ச்சி வீதம் கடந்த பத்தாண்டுகாலமாக பெறப்பட்டுவந்த 22.5 சதவீதங்கொண்ட ஆண்டுச் சராசரி வளர்ச்சி வீதத்தைவிட கூடியதாகும். எனினும், 1980 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட சுற்றுலாப் பயணத்தர்களின் போக்குவரத்து வளர்ச்சி வீதம் 1979 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்டதைவிடக் குறைவானதாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதே வேளையில் 1980 ஆம் ஆண்டில் வருகைதந்த '' இன்பப்பயணிகள் '' (அதாவது நாட்டில் 24 மணித்தியாலங்கட்குக் குறைவாக தங்கும் தற்காலிக வருகையாளர்களையும் கடற் சுற்றுலாப்பயணிகளையும் உள் ளடக்கி) ஆனால் இடைப்போக்கிலுள்ள பயணத்தர்களையும் நீக்கி 8,636 ஆக விளங்கி வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினை மாற்றியமைத்தது.

மொத்தச் சுற்றுலாப்பயணத்தர்களின் வருகையினை மட்டும் கொண்ட கணக்கெடுப்பு நாட்டில் சுற்றுலாப்பயணத்தர்கள் போக்குவரத்தின் உண்மை அளவினைக்காட்டும் முழுக் குறிக்காட்டியாக அமையாது. அளவினை அறிவதற்கான சிறந்த அளவுகோலாக தங்கும் இரவுகளின் எண்ணிக்கை பயன் படும். சுற்றுலாப்பயணத்தர்களால் 1980 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட மொத்த இரவுகள் 35 இலட்சங்களாக விளங்கி 30 சதவீதம்கொண்ட ஆண்டு வளர்ச்சியை எடுத்துக்காட்டியது. சுற்றுலாப்பயணத்தர்களின் வருகையின் அதிகரிப்பைவிட குறைந்த வீதத்திலேயே சுற்றுலாப் பயணத்தர்களின் இரவுகள் அதிகரித்துள்ளமை புலப்படுகின்றது. சுற்றுலாப்பயணத்தர் இரவுகளின் வளர்ச்சி வீதம் 7.7 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தமையை 1979 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட தொடர்பான எண்தொகைகள் காட்டுகின்றன. ஒரு சுற்றுலாப்பயணியின் தங்கும் காலத்தின் சராசரி அளவு 1975 ஆம் ஆண்டில் 9.8 இரவுகளிலிருந்து 1979 ஆம் ஆண்டில் 11.1 இரவுகளாகவும் 1980 இல் 11 இரவுகளாகவும் மிகச்சிறிதளவான வீழ்ச்சியினை அடைந்தது.

அட்டவணை 1.26

## சுற்றுலாப் புள்ளி விபரங்கள் 1979 - 1980

| விடயம் | | 1979 | %மாற்றம் 1979 மேல் 1978 | 1980 | %மாற்றம் 1980 மேல் 1979 |
|---|---|---|---|---|---|
| 1. சுற்றுலாப் பயணிகள் வருகைகள் | ... | 250,164 | 29.9 | 321,780 | 28.6 |
| 2. இன்பப் பயணிகள் வருகைகள் | ... | 5,563 | 34.5 | 8,636 | 55.2 |
| 3. பயணி இரவுக்ள் (ஆயிரத்தில்) | ... | 2,777 | 34.7 | 3,529* | 27.0 |
| 4. மொத்த சுற்றுலாப் பெறுகைகள் | | | | | |
| 4.1 (ரூ. பத்து இலட்சங்களில) | ... | 1,188.5 | 36.6 | 1,600.0(அ) | 34.6 |
| 4.2 (சி. எ. உ. பதது இலட்சங்களில்) | ... | 59.0 | 44.4 | 74.4 | 26.0 |
| 4.3 (ஐ. அ. டொலர்) | .. | 76.3(ஆ) | 36.7 | 97.0 | 27.1 |
| 5. நோக்கங்களின்படியான வருகைகளின் எண்ணிக்கை | | | | | |
| 5.1 களியாட்ட | ... | 227,218 | 27.8 | 292.062 | 28.5 |
| 5.2 தொழில் சம்பந்தமான | ... | 13,460 | 16.5 | 24,641 | 83.1 |
| 6. தேசிய இன அடிப்படையின் படியான வருகைகளின எண்ணிக்கை | | | | | |
| 6.1 மேற்கு ஐரோப்பா | ... | 163,206 | 27.3 | 215,650 | 32.1 |
| 6.2 ஆசியர் | ... | 56,187 | 56.1 | 72,022 | 28.2 |
| 6.3 வட அமெரிக்கா | .. | 13,941 | 12.2 | 15,408 | 10.5 |
| 7. மொத்தத் தொழில் வாய்ப்பு | ... | 43,409 | 19.9 | 53,018 | 22.1 |
| 7.1 நேரடி | ... | 18,472 | 19.9 | 22,561 | 22.1 |
| 7.2 மறைமுக | ... | 24,937 | 19.9 | 30,457 | 22.1 |

மூலம்: இலங்கை சுற்றுலாச் சபை.

(அ) திட்டமிடப்பட்ட
(ஆ) தற்காலிகம்

கடந்த காலத்தில் முக்கிய சந்தையாக விளங்கிய மேற்கத்திய ஐரோப்பா முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1980 ஆம் ஆண்டில் தனது சந்தையின் பங்கினை 2 சதவீதத்தினால் அதிகரித்துக்கொண்டது. இரண்டாவது ஆகப்பெரிய சந்தையைக் கொண்டிருந்த ஆசிய சந்தை 1979 ஆம் ஆண்டினைப்போலவே மொத்த வருகையினை 1980 ஆம் ஆண்டிலும் 22 சதவீதமாகவே தனது பங்கினை வைத்திருந்தது. வட அமெரிக்காவின் சந்தைப்பங்காகிய 5 சதவீதம் முன்னைய ஆண்டின் எண்தொகையுடன் ஒப்பிடுகையில் சிறிதளவிலான வீழ்ச்சியைக்காட்டியது.

சுற்றுலா வருவாய்கள், சுற்றுலாலாப்பயணிகளின் செலவுகள், அதாவது நாட்டில் தங்கும் வசதிகட்கும், உணவு, போக்குவரத்து, வேறு விடயங்களின் கொள்வனவு, பொழுதுபோக்கு நடவடிக்கைகள் என்பன மூலம் பெறப்படுபவற்றை உள்ளடக்கும். இக்கைத்தொழில் மூலம் 1980 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட மொத்த வருவாய் ரூ. 16,000 இலட்சங்களாக இருந்து, இது, 1979 ஆம் ஆண்டின் உழைப்புக்களைவிட 33 சதவீதம்கொண்ட அதிகரிப்பினைக் காட்டிநின்றது. சி எ உ நியதியில் மொத்த வருவாய்கள் 744 இலட்சங்களாக விளங்கி 26 சதவீதங்கொண்ட அதிகரிப்பைப்பிரதி பலித்தவிடத்து ஐ. அ. டொலர்களினால் பெறுமதி 970 இலட்சங்களாகச் காணப்பட்டு 1979 ஆம் ஆண்டினை விட 27 சதவீதங்கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தது.

1976 ஆம் ஆண்டில் ஆறுவது ஆகக்கூடிய வெளிநாட்டுச் செலாவணியை உழைப்பதாக கருதப்பட்ட சுற்றுலாத்துறை, 1977 ஆம் ஆண்டில் ஐந்தாவது இடத்தைப்பெற்று 1978 1979ஆம் ஆண்டுகளில் தொடர்ந்தும் ஐந்தாவது இடத்திலேயே இருந்தது. 1980 ஆம் ஆண்டில் சுற்றுலா வருவாய்கள் தெங்கு உற்பத்திகள் மூலம் பெறப்பட்ட வருவாய்களைவிட அதிகரித்து இலங்கையின் நாலாவது ஆகக்கூடிய வெளிநாட்டுச் செலாவணியை உழைக்கும் இடத்தினைப்பெற்றது. சென்மதி நிலுவைத்தரவுகள் சுற்றுலா மூலம் பெறப்படும் வருவாய்களின் வளர்ந்துவரும் முக்கியத்துவத்தைஎடுத்துக்காட்டுகின்றது. 1975 ஆம் ஆண்டில் பணிகள்மூலம் பெறப்பட்ட பெறுகைகளில் 22 சதவீதம் சுற்றுலாவின் மூலம் பெறப்பட்டிருந்த வேளையில் 1979 ஆம் ஆண்டில் இது 35 சதவீதமாக அதிகரித்து 1980 ஆம் ஆண்டில் மாற்றமுறாது விளங்கியது.

தொழில் செறிவுடைய கைத்தொழிலாக நோக்குமிடத்து சுற்றுலா அதே துறையில் தொழில்வாய்ப்புக்களை உருவாக்கும் அதே வேளையில் மறைமுகமாக தொடர்புடைய துறைகளிலும் தொழில்வாய்ப்பினை ஏற்படுத்தியது. கடந்த பத்தாண்டுகாலப்பகுதியில் தொழில்வாய்ப்பினை வழங்கவேண்டும் என்ற அரசின் முயற்சிக்கு சுற்றுலாசாதகமான முறையில் உதவியுள்ளது. 1980 ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறையால் உருவாக்கப்பட்ட நேரடியான தொழில்வாய்ப்பு 1979 ஆம் ஆண்டின் 18,472 இல் இருந்து 22,561 ஆக உயர்ந்து 22 சதவீதம் கொண்ட ஆண்டுக்கான அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. 1980 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட மறைமுகமான தொழில்வாய்ப்புக்கள் 30,457 ஆக மதிப்பிடப்பட்டு 1979 ஆம் ஆண்டினைவிட 22 சதவீதம் கொண்ட வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்துள்ளது. இதன் விளைவாக மொத்த தொழில்வாய்ப்புக்கள் 53,018 ஆக விளங்கி வருகை தந்த ஒவ்வொரு 6.1 சுறறுலாப்பயணிகட்கு ஒரு தொழில்வாய்ப்பு ஏற்பட்டதாகக் கருதலாம்.

சுற்றுலா ஒரு துறையாக கணிக்கப்பட்டு பெருமளவில் தாராளமான வரி ஊக்குவிப்புக்களைப் பெற்றிருந்தது. 1980 ஆம் ஆண்டு வரையில் மொத்த மூலதன முதலீடுகள் ரூ. 8,880 இலட்சங்களாக விளங்கியவிடத்து இதில் 77 சதவீதம் உள்நாட்டுச் செலவுகளாகவும் மிகுதி 23 சதவீதம் வெளிநாட்டுக் கூறுகளாகவும் காணப்பட்டன.

## சென்மதி நிலுவை

இறக்குமதிகள் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டமையும், பண்ட வர்த்தக மாற்று வீதத்தில் மேலுமொரு வீழ்ச்சி ஏற்பட்டமையும், பண்டக்கணக்கு நடைமுறைக்கணக்கு மீதான குறைகள் பெருமளவில் விரிவடைந்தமையும், வெளிநாட்டுச் சொத்துக்களில் காணப்பட்ட கணிசமானளவு வீழ்ச்சியும், இலங்கை ரூபா பெரும்பான்மை முதன்மை நாணயங்களுக்கெதிராக அதன் மதிப்பு குறைவுற்றமை என்பன 1980 ஆம் ஆண்டில் சென்மதி நிலுவையில் காணப்பட்ட முதன்மைப் பண்புகளாகும்.

பல ஆண்டுகளின் நிறைவற்ற செயலாற்றத்தின் பின்னர், 1977 ஆம் ஆண்டில் இலங்கையின் சென்மதி நிலுவை, பண்ட, நடைமுறைக் கணக்குகளில் மிதமான ஆயினும் வரவேற்கத்தக்க மிகையுடன் சாதகமானதொரு நிலைக்குத் திரும்பியது. அன்று தொடக்கம் நடைமுறை, பண்ட கணக்குகள் தொடர்ந்து படிப்படியாக அதிகரித்துச் செல்லும் குறையினைப் பதிவுசெய்து வந்தமையால் சென்மதி நிலுவையானது மீண்டும் பாதகமான நிலைக்குத் திரும்பியது. 1980ஆம் ஆண்டில் பண்டக்